# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey.
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுச] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷ மாசி மீ கூ உ. வெள்ளிக்கிழமை (20 Feb. 1953) [இல - அறு]

## ஸ்ரீ இராமகிருஷ்ண ஜயந்தி

வருகிற ஞாயிற்றுக்கிழமை (22-2-53) பிற்பகல் 5 மணி தொடக்கம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண ஜனன தினம் கொண்டாடப் பெறுமென்றும் அத்தருணம் பூசை, பசனையும், ஆத்மஜோதி ஆசிரியர், திரு. க. இராமச்சந்திரன் அவர்களாற் சொற்பொழிவும் திரு. தில்லைராஜபுரம் B.A கோஷ்டியாரால் இசையரங்கு நடைபெறுமென்றும் ஜயந்தியை ஒழுங்கு செய்யும் வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் அறிவிக்கின்றார்கள்.

## விடபேதி விட்டபாடில்லை

ஆனைக்கோட்டையில் விடபேதியால் இருவர் இறந்ததாகவும் அவர்களுடன் நடமாடியவர்களை அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் அறிகின்றோம்.

மன்னார்ப்பகுதியிலும் முருங்கனில் இக்கோய் பரவி வருகின்றதாகச் செய்தி எட்டுகிறது.

மக்கள் உரிய பாதுகாப்பு முறைகளை எடுத்துக்கொள்ளக் கடவர்.

## யாழ்ப்பாணம் பெண்கள் ஊழிய சங்கம்

சீமாட்டி இராமநாதன் அவர்களதும், வைத்தியர் திரு. முத்துக்குமாரு கதிரவேற்பிள்ளை அவர்களதும் பிரிவுகுறித்த அனுதாபக் கூட்டம் யாழ்ப்பாணப் பெண்கள் சங்கத்தின் ஆதரவிற் சென்ற 11-2-53 புதன்கிழமை பிற்பகல் 4மணியளவில் மகளிர் கலாசாலையில கல்லூரித்தலைவி திருமதி சரோஜினிராவ் அவர்களது தலைமையில் நடைபெற்றது. சங்கத்தலைவியர் மா. மங்களம்மாள் சங்கப்பொக்கிஷதார் திரு. எஸ். எஸ். நாதன் திரு. ராஜா சோமசுந்தரம், திரு. பத்மசுந்தரியாதியோரால் மறைந்துபோன பெரியாரிருவரது மரணத்துக்காக வருத்தம் தெரிவித்தபின்னர் ஸ்ரீமதி மங்களம்மாள் அவர்களால் கொண்டுவரப்பெற்ற அநுதாபத் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பெற்றது.

## யாழ்ப்பாணம் நகரசபை

### 'ஆடு மாட்டை அப்புறப்படுத்தார்தீர்'

யாழ்ப்பாண நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் திரு. K. துரைசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வெளியூருக்கு ஆடு மாடுகளை அப்புறப்படுத்துவது, ஆருமாடுகள் அநேகம் அற்றுப் போனமையால், யாழ்ப்பாணக் கமக்காரர்களுக்குப் பெருங் கேடாகுமென்று, அதனைத் தடுக்க வேண்டுமென ஒரு தீர்மானம கொண்டுவந்தார். அது நிறைவேறியது.

யாழ்ப்பாண அரசாங்க வைத்தியசாலையிற் கடமையாற்றும் சத்திர வைத்தியரையும், கண், காது, கண்டம் முதலியவற்றுக்கு விசேட வைத்தியராக யிருப்பவரையும் இவ்விடமிருந்து எடுத்துவிட்டமை யாழ்ப்பாண மக்களுக்குப் பெருந் தீமை விளைக்குமென்றும் இவ்விருவைத்தியர்களும் இந்த வைத்தியசாலையிற் கடமையாற்ற வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தைத் திரு. R. C. மன்மதராயன் கொணர்ந்தார். அது கைக்கொள்ளப்பட்டது.

## பெண்மணியின் பெருந்தன்மை

### அரிசி வியாபாரிகளுக்கு அளித்த பதில்

வவனியாப் பகுதியில் ஒரு பெண்மணி 1000 புசலுக்கு மேலாக நெற்பொதிந்து வைத்திருப்பதை அறிந்து கொள்ளை விலைக்கு நெல்லு விற்கும் கள்ள வியாபாரிகள் இவற்றை எவ்விலைக்கும் பெற்றுவிடலாமென அரும்பாடு பட்டார்களாம். ஆனால் அந்த அம்மை பஞ்சம் ஒருவேளை வருமென்றும் வந்துவிட்டால் அவ்வூரவர்களின் பசிப்பிணியைத் தீர்க்க அவற்றைத் தான் பொதிந்து வைக்க வேண்டுமென்றும் சொல்லிப் பணத் தூண்டிலில் அகப்படவில்லை எனறும் தெரியவருகிறது. சிப்பிக்குள் முத்துப் போல்வாரும் உளர்.

## உ

## நஞ்சமுது செய்த கருணாகரனே...!

திருச்சிற்றம்பலம்.

புலன்கடி கைப்பிக்க யானுந் திகைத்திங்கொர் பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண் டாய்விண்ணு மண்ணுமெல்லாங்
கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய் தாய்கரு ணாகரனே
துலங்குகின் றேனடி யேனுடை யாயென் றொழுகுலமே.

திருச்சிற்றம்பலம்.

## திருக்கேதீஸ்வர வித்தியாசாலை பரிசளிப்புக் கொண்டாட்டம்

இம்மாதம் உ-ந் (13-2-53) திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் மாந்தைப் பகுதி காரியாதிகாரி அவர்களின் தலைமையில் திருக்கேதீஸ்வர வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆரம்பமாயின தீர்ப்பாய்ச்சற் பகுதி அதிபர் ஸ்ரீ ஆறுமுகம் அவர்களும், கொழும்பு யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலிருந்து வந்த மற்றும் பலரும் சமூகமாயிருந்தனர். பாலர்களின் நடனம், சிறுமிகளின் கும்மி, சிறுவர்களின் பேச்சுக்கள் நிகழ்ந்தன. தலைமை ஆசிரியரின் அறிக்கை பாடசாலையின் முன்னேற்றத்தைக் காட்டியது. இன்னும் செய்யப்படவேண்டியவற்றையும் குறிப்பாய்க் காண்பித்தது.

இப்பாடசாலையினின்று விவேகானந்த சபையாரால் நடாத்தப்பட்ட பரீட்சையில் தோற்றிச் சித்தி எய்தினோர்க்கும் கூடிய அளவு தேவார திருவாசகங்களை மனனம்பண்ணினோர்க்கும் சைவ சார முறைப்படி ஒழுகுவோர்க்கும் பரிசில் வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டு, அப்படிப்பட்டவர்களின் பெயர்களடங்கிய அட்டவணை ஒன்று பரிசில்கள் வழங்கும் திருப்பணிச் சபைக் காரியதரிசிக்கனுப்பப்பட்டது.

## மறவன்புலோவில் சிவராத்திரி தினம்

மறவன்புலோ சைவமகா சபையின் ஆதரவில் யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபையாரால் ஸ்ரீ புண்ணியநாச்சி தருமநிதியிலிருந்து உதவிய நெல்லுடன் சிதம்பரசித்தி விநாயகர் ஆலயத்தில் (12-2-53) வியாழக்கிழமை பிற்பகல 5 மணியளவில் விசேட அபிஷேகமும், அன்றிரவு சிவராத்திரி புராணமும், நான்கு யாமப் பூசைகளும் நடைபெற்று மறுநாள் உதயத்தில் அன்னதானமும் நடைபெற்றன.

# சமயம் வளர்ப்பது இப்படித்தானா?

## சுயநலத்தால் மதத்துக்காபத்து!

பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டு வந்தநாம் சிந்தனையினாலேயே மனிதன் தன்னை உயர்த்துகிறான் என்பதைக் காண மறுக்கிறோம்.

சரவணை என்றகிராமத்தில் கடந்த பல வருடங்களாகச் சைவப் பாடசாலை இருந்தும், சைவர்களாய் வாழும் பஞ்சமர்களுக்குச் சைவக் கல்வியளிக்க இடந்தர மறுத்துள்ளது. அவர்கள் பக்கத்திலே கிறிஸ்தவபாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு அவர் ஆங்கு கற்றுவந்தனர். ஆயினும தம்முன்னோர் வழிவந்த தேவார திருவாசகங்கள் தம் பிள்ளைகளுக்கு ஊட்டப்படவில்லையே என அவர்கள் கவலையுடன் இருந்தனர். தம்மில் அரைவாசிப்பேர் கிறிஸ்துமதப் பிரவேசஞ் செய்தமையை நினைந்து கவலையுற்றனர். சென்றவாரம் சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் அவர்களின் சிறார்கள் சேர்க்கப்பட்டனர். ஆனால் ஜாதி ஹிந்துக்கள் எனப்பட்டோர் அதை எதிர்த்துத் தம் பிள்ளைகளை வீட்டில் நிறுத்தி விட்டனர். அயற்கிராமப் பள்ளிகளில் தம்பிள்ளைகள் எல்லாரதத்தினரும், இனத்தினருமடங்கிய வகுப்புகளிற் கற்பதைப் பொருட்படுத்தாதவர்கள். தம் ஊரில் இது தீங்கு விளைக்குமென வீண் வாதம் இடுகின்றனர்.

மறுபக்கம் சரவணையின் ஓர் பாகமாகிய புளியங்கூடல் மக்கள் தம்மவர் ஒருவர்க்கு ஆசிரியப்பதவி தாமறுத்த சைவப் பள்ளியிலிருந்து 25 க்கு மேற்பட்ட பிள்ளைகளை விலகச் செய்து, தமக்குப் பதவி தந்த கிறிஸ்தவப் பள்ளியிற் சேர்த்துள்ளனர். "பஞ்சமப்பள்ளி" சுயநலத்துக்குப் பயனபடும்

### "சரவணை-சைவரவன்"

வேளையில் "குலப்பள்ளி" யாகிறது. பஞ்சமரின் சமயப் பற்று மற்றையோரின் தன்னலத்தைப்பார்த்து நகுகின்றது.

இருசாதியாரும் சேர்ந்து படிப்பதால பஞ்சமப் பிள்ளைகளே வேளாளரின் பொறாமை வஞ்சகம் முதலிய தீய குணங்களைப்பெற்றுத் தம் வஞ்சனையறியா நெஞ்சில் அழுக்கைப் பெறுவர் என்று அஞ்சுகிறோம்.

அறநெறி தவறிய உயர்குல மக்கள், வஞ்சமற்ற வாழ்த்தும் பஞ்சமரிலும் தாம் தாழ்ந்த பிராணிகள் ஆகினார்கள் என்பதை என்று உணர்வரோ.

அரசியல் அலை

# ஆற்றுத நண்டு தழலைக்கவ்வுதல்

## தோல்வியுற்றாரின் உள்ளக் கொதிப்பு

## அதில் உண்டாகும் நச்சுப் புகை

இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் நெறிமுறை தவறாதவர். உண்மையென்று கண்டால் ஒருபொழுதும் எதிர்க்காத மனப்பான்மையினர். காந்திப் பெரியாரின் காலடியிற் கிடந்து ஒழுக்கமுறை உணர்ந்தவர். இத்தகைய பெரியாரையும் அவர் தலைமையிலுள்ள அகில இந்திய தேசீய மாநாட்டையும் எள்ளி இழிவுபட இந்திய பாராளுமன்றத்தில் ஒருவர், தேர்தலிலே தோல்வியுற்ற கட்சியைச் சேர்ந்த வகுப்புவாதக் கூட்டத்தின் தலைவர் திரு. சியாம்பிரசாத் முக்கேர்ச்சி அவர்கள் சென்ற செவ்வாய்க்கிழமை நச்சுப்புகை பாவித்தாரென்றால் எவ்வளவுதூரம் தோல்வி அபிமானம் நல்லவர்களையும் அல்லவர்களாக்குமென்பது புலனாகின்றது.

டெல்கிமாநகரிலே நடந்த தேர்தலிலே இந்திய தேசிய மகாநாட்டுக் கட்சி (இந்திய அரசாங்கக் கட்சி) மதுவாலும் மங்கையராலும் வெற்றிபெற்றனர் என்று திரு. முக்கேர்ச்சி அவர்கள் சொன்னமை வெட்கக்கேடானதென்றும் அருவருக்கத்தக்கதென்றும் ஆதாரமற்றதென்றும் நேருப் பெரியார் நிறுத்திப் பேசினார். அவ்வளவில் நின்றாரா திரு. முக்கேர்ச்சி. ஆவேசங் கொண்டார்போன்று திரும்பவும் பானமும் பணமும் என்று தான் சொன்னாரேயன்றி மதுவும் மங்கையரும்என்று தான் சொல்லவில்லை என்று வாதாடினாராம்.

மதுவானாலென்ன மங்கையரானாலென்ன! பானமானாலென்ன பொருளானாலென்ன! இரண்டு கட்சிப் பட்டுத தேர்தல் நடக்கும்பொழுது வெற்றி பெற்றவர்கள்தான் இந்த இழிவான முறையில் நடந்துகொண்டார்கள் என்று தோல்வியுற்றவர்கள் சொல்லுவது வழக்காய்விட்டது. தேர்தலில் வாக்களித்த ஒவ்வொருவரின் உள்ளத்தையும் ஊடுருவிப் பார்த்தால் விளங்கும் ஒழுக்கீனம் ஒருபாற்பட்டதா என்ற உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஆு மாசி மீ
கூஉ வெள்ளிக்கிழமை

## இப்படிச்செய்தாலென்ன!

அண்மையிலே சைவாசிரியர்கள் சித்தாந்தசரபம் ஸ்ரீ ஈசான சிவாச்சாரியாருடன் அளவளாவிக் கலந்து சமயக்கல்வி எவ்வாறு புகட்டப்பட வேண்டுமென்றுரையாடினர் என்பது அன்பர்கள் அறிந்ததே. அவ்வமயம் ஆசிரியர் செ. சின்னத்துரை அவர்கள் சமயக் கல்விக்கு இன்றியமையாது வேண்டப்படுவது சைவாசிரியர்கள் என்றும் அன்னார் பள்ளிக்கூடங்களிற் கல்வி பயிற்றுங்காலத்திற் சைவ சின்னங்களை அணிந்து சைவ வாழ்வு நடாத்திக் காட்ட வேண்டுமென்றும் ஆணித்தரமான குறிப்புரை பகர்ந்தமை ஆறுதல் அளிக்கின்றது.

சைவசமயக் கல்வி, பயிற்றுவதனால் அன்று ஆசிரியர்கள் ஒழுகிக் காட்டுவதனாலேயே, புகட்டப்பட வேண்டுமென்றுபன்முறை நாம் கூறியுள்ளோம். சைவக்கல்விக் கழகங்களிலே நாயன்மார் குருபூசைநாட்களையேனும் நன் முறைப்படி எல்லா ஆசிரியர்களும் கொண்டாடி வருவார்களேயானால் சைவ முறை பிள்ளைகள் உள்ளத்திற் படியாது விடுமா? நால்வர் திரு நாட்களையே ஒழுங்காக — உரிய முறையிற் போற்றி வருவதைச் சைவப் பள்ளிக்கூடங்களிற் காண்பதரிதாகின்றது. எங்கேனும் அவை நினைவு கூரப் பெற்றால் அங்குள்ள பழைய முறை ஆசிரியர் ஒருவரே அவற்றிற் கலந்து கொள்வாரன்றி ஏனைய ஆசிரியர்களை அவ்விடத்திற் காணமுடியாதென்பது எவருமறிந்த உண்மை.

சைவப் பாடத் திட்டம் வகுக்க வேண்டியதில்லை அது முன்னாளிலேயே சீர்படுத்தப்பட்டிருக்கின்ற பெருமையை நாவலர் நற்றகையார் சைவ உலகிற்களித்திருக்கின்றார். பின்னாளில் இந்நாட்டில் திரு சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களும் தென் இந்தியாவிற் பல சைவப் பெரியார்களும் செய்து வைத்திருக்கின்றனர். சைவப் பாடம் கற்பிக்கப்படுவதல்ல சைவ முறைப்படி கையாளப்படுவதே வேண்டப்படுவது. இதை யார் செய்யவேண்டும்; செய்து காட்டவேண்டும்? ஆசிரியர்களா, பிறரா?

சைவப் பள்ளிக்கூடங்கள் என்று இனந் தெரியாமற் கல்விக்கழகங்கள் இருப்பதும் ஆங்கு சைவச் சிறுரின் அறிவுப் பொறுப்பை ஏற்ற ஆசிரியர்கள் எதற்கும் இசைவர் என்ற நிலையில் நிற்பதும் உண்மையெனக் கண்டு இச்சீர்கேட்டுக்கெல்லாம் அடிப்படையாயுள்ள தன்மையை ஆராய்ந்து அதை நீக்கி, நன் முறையை ஆக்குவதற்கு ஸ்ரீ ஈசான சிவாச்சாரியர் அளித்த மதி மொழிகளைச் சைவாசிரியர்கள் உள்ளத்தமைத்து உற்றுணர்ந்து ஆவன செய்ய வேண்டிய பெரும் பொறுப்பை ஏற்றிருக்கின்றனர்.

ஆரம்பப் பள்ளிக்கூடம், உயர்தரக்கலாசாலை என்ற இவ் வகையின என்று சமயக் கல்விக்குத் திட்டம் இடக்கூடாது. நுண்ணியற் கலாநிதி ச. இராதா கிருட்டினன் அவர்கள் பரத நாட்டுக் கல்வி முறைத் திட்ட ஆராய்ச்சிக் குழுவின் தலைமை தாங்கி விடுத்த அறிக்கையில் கல்விக்காக வேலை தொடங்கு முன் ஒவ்வொரு காலையிலும் ஒரு நாழிகைப் பொழுதுக்கு அமைதியாய் இருந்து இறைவனை, இதயத்தமர்த்தி ஏத்தி யோகநிலையிற் பயிற்சி செய்து வருவது கழகக் கருமத்தின் முக்கிய பகுதியாயிருத்தல் வேண்டும் என்று அழகாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இன்னமும் அப்பேரறிஞர், பல்கலைக் கழகத் திட்டத்திற்கு அரும்பெரும் நூல்கள், —எங்கள் கீழ்மையில் எங்களை வெட்கித் தலைகுனிய வைக்குந் தரகத் அச்சம் நீக்கி ஆறுதல் அளிக்குந் தன்மைய நூல்கள்—தரும் அறிவு பாடமுறையில் இன்றியமையாதது என்று நுணுக்கமாக கவின்றுரை செய்திருக்கின்றார். அன்னார் வேதாகமங்களையும் பன்னிரு திருமுறைகளையும் புராண இதிகாசங்களையுமே அரும்பெரும நூல்கள் என்றார் எனக் கூறவும்வேண்டுங்கொல்.

ஆகவே சைவாசிரியர்களே, சைவக் கல்விக்கழக ஆசிரியர்களே, இப்படிச் செய்தால் என்ன?

=O=

### வேள்விக்குப் பதிலாக மா அபிடேகம்

சுன்னாகம் ஐயனார் கோவில் ஆதீனகர்த்தா திரு. சி. பெரியதம்பி அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் அறிவித்தலின்படி இவ்வாண்டு இக்கோவிலில் வேள்வியென்ற பெயரால் நடைபெறும் படுகொலையை இல்லாமற்செய்து அவ்வேளை எம்பெருமானுக்கு மா அபிடேகமும் அடுத்தநாள் பெரும அன்னதானமும் முறைப்படி நடக்குமென்ற நற்செய்தி எமதுள்ளத்திற்குப் பேருவகை அளிக்கின்றது.

பலகால் முயன்றும் பயன்படாத இப்பெருஞ் சீவகாருண்ணியப் பணியில் ஈடுபட்ட கோயில் ஆதீன கர்த்தாவும் அவருக்கு நற்றுணை புரியும் தொண்டர்களும் பிறவிப் பெரும்பயன் அடைந்த பெருமையைப் பெற்றுவிட்டனர் என்றே சொல்லவேண்டும். ஆகாத செயலை ஒருவர் தாமா

தொடர் கதை

## கப்பலோச்சுவோர் காணுங் கடல்வாழ் கன்னிகையர்

### அழகு வேண்டு மென்றால் ... ... ... ...
### துன்பமும் அடையத்தானே வேண்டும்!

# ★ நீரர மங்கையர் ★

— 4 —

இந்திவ்வாறாக, வந்தது ஐந்தாவது சிறுமியின் முறை. மாரிக்காலத்திற் பிறந்தவளாகையால் அவள் கடல் மேற்புறத்துக்கு ஏற வேண்டிய காலமும் மாரிக்காலத்திலேயே. இதனால் மற்றச் சகோதரியரிலும் அதிக சிறப்புடைய காட்சிகளை அவள் காணக் கூடியதாய் இருந்தது. கடலெங்கும் நீல நிறமாய்த் திகழ்ந்தது. அதற்கு மேல் பெரிய உறைபனிப்படலங்கள் மிதந்து ஓடிக்கொண்டிருந்தன. அவை முத்துப்போல் வெள்ளை நிறம். ஒவ்வொன்றும் மனிதர் கட்டும் கோபுரங்களினும் உயரம். பலவகை உருவங்களோடு மிளிர்ந்தன. அவற்றுள் மிகப் பெரிய படலமொன்றில் அவள் போய் அமர்ந்திருந்தனள். அப் படலத்தைக் காணாது அதற்கு எதிராக வந்த மரக்கலங்கள் பல சடுதியில் அதைக் கண்ணுற்றுத் தம் மார்க்கத்தை மாற்றி விசையாய் ஓடின. அவ் விசையினால் எழுந்த இளங் காற்று அவள் கூந்தலை அசைத்தது. அன்றிரவு சட்டென்று கருமுகில் வானத்தை வந்து மூடியது. அதன் பின் மின்னல் மின்னியது. இடியும் இடித்தது. அப்பொழுது மலைபோல உயரமான அவ் வெண்ணிற உறைபனிப் படலங்களைச் சடுதியில் கருநிறமடைந்த கடல் வேகமாய் மோதியடித்து உயர்த்தியும் தாழ்த்தியும் அசைத்துக் கொண்டிருந்தது. அடிக்கடி உண்டாகும் மின்னல் ஒளியினால் இக்காட்சி கண்ணுக்குத் தெரிந்தது. மின்னொளி கடலெங்கும் கொடி போல் வளைந்துவளைந்து ஓடிக்கொண்டிருந்தது. இதை அச்சுறுமி அச்சமின்றிப் பனிக்கட்டிப் படலத்தில் இருந்தவண்ணமே உற்று நோக்கினாள்.

நீரர மகளிர் சிறுமிகளாய் முதன் முதல் கடலடியினின்று மேல் வந்து இந் நிலவுலகத்தைப் புதிதாகக் காணும்போது அங்கே தாம் காணும் பொருட்களின் அழகில் மயங்கிவிடுவர். ஆனால் விரும்பிய போதெல்லாம் கடலின் மேற்புறம் ஏறக்கூடிய இளமங்கைப் பருவம் வந்தவுடன் அப்பொருட்களில் அவர் முன்போல மயங்குவதில்லை. மேற் புறம் வந்தால், கடலின் அடியிலுள்ள தமது மாளிகைக்குப் போய்ச் சேருவது எப்போது எப்போது என்று ஆவலோடு இருப்பர். சிறிது காலத்தின் பின்னர் வீடுபோலத்திறமான இடம் வேறெங்குமில்லை எனச் சொல்லிக்கொண்டு அங்கிருந்து வெளியேற விரும்பார்.

ஒவ்வொருகாலும் பின்னேரவேளை சகோதரியர் ஐவரும் ஒருவரோடொருவர் கைகோத்த வண்ணம் கடலின் மேற்புறம் வந்து சேருவர். அவருடைய குரலோசை மிகவும் இனியது. நிலவுலகத்து மக்கள் மக்கள் ஓசையினும் பன்மடங்கு இனிமை. மரக்கலங்கள் பெரும் புயலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் வேளையில் அவர் அவைக்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

கலைமாணி, க. கணபதிப்பிள்ளை அவர்கள்
இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் ஆக்கியது.

### அணிந்துரை அரங்கம்

#### சுரபி

மாணவ மாணவிகளின் மாத வெளியீடாகத் தோன்றி வரும் சுரபி மலரில் ஒன்பதாம் இதழ் வழமைபோல மணங்கமழ விரிந்திருக்கின்றது. சொல்லாட்சித்திலயை நூல்கள் மாத்திரமன்று செய்தித்தாள்களும் திங்கள் வெளியீடுகளும் நன்கணிபெறச்செய்ய உதவுகின்றன. இவ்வழியில் மழலைமொழி மாணவர்கள் சுரபி வாயிலாக கற்றெண்டு புரிகின்றார்கள் என்றே நாம் எண்ணுகின்றோம். தமிழின் தூய்மையையும் செம்மையையும் காப்பாற்ற உழைக்கும் உணர்ச்சி சுரபியிற் காணக்கூடியதாயிருக்கின்றது. ஏனைய மலர்கள்போலாது என்றுங் குறையா இதழ்கள் விரிந்து வர இறைவன் அருள் செய்வாராக.

# ‘இரும்பு தரு மனத் தேனை ஈர்த்து’-

## உள்ளத்தின் உள்ளபடியான தன்மை!

இவ்வாரத்தில் என் மனதைக் கவர்ந்த பொன்மொழித் தொடர் “இரும்புதரு மனத் தேனை ஈர்த்து” என்னும் மாணிக்கவாசக அடிகளது திருவாக்காகும். இயற்கையில் ஆன்ம இலக்கணங்களுள் ஒன்று வேம்பு நிறை புழுப்போல நோக்கிற்றை நோக்குந் தன்மை. இத்தன்மையுடைய ஆன்மா உலக விடயங்களில் அழுந்தி எண்ணில்லாத காலம் அறுமிற் பயினற நிலையறற துன்பத்துக் கேதுவாக உள்ளன என அவற்றின் தன்மையைக் கண்டவிடத்தும் பயிற்சி வயத்தால் அவற்றில் மயங்கிக் கிடக்கும். கருணை சமுத்திரமாகிய பரம்பொருள் அத்தன்மையுடைய பக்குவம் வாய்ந்த ஆன்மாவை மேலும் மேலும் உலக விடயங்களிற் செல்லவிடாது தடுத்து அவற்றின் நோக்கு தன் திருவடிக்கண்ணே படியுமாறு செய்கின்றது. நித்தியானந்தமாகிய திருவடிகளை நோக்கத் தலைப்பட்ட அவ்வான்மா தனக்கு இயல்பாகவுடைய நோக்கிற்றை நோக்குந் தன்மையால் அத்திருவடிகளை நோக்குந் தன்மையில் முன்னேற்ற மடைந்து ஈற்றில் அத்திருவடிகளே தனக்குச் சதமெனக் கண்டு அதனை கண்ணே இலயித்து விடுகின்றது சார்ந்ததன்வண்ணமாய் ஒழுகுந் தன்மையுடைய அவ்வான்மா, வேறொரு துணையுமின்றித் தன்னை வந்தடைந்தவர்களுக்கு சிவானுபவமாகிய முத்திப் பேற்றைக் கொடுக்கவல்ல அத்திருவடிகளில் இலயித்து நித்தியானந்தத்தை அநுபவித்தல் சாத்தியமானதே; எனினும், அச்சூழ்நிலையைத் தலைப்பட்ட அதாவது சிவபெருமானால் ஆட்கொள்ளப்படும் பக்குவம் வாய்ந்தது அவரது திருவிளையாட்டாம். பரிசோதனைச் சூழலில் புகுந்த ஆன்மா பேரின்பத்தை அடையுந் துணையும் எவ்வகையில் பக்குவப்படுத்தப்படுகின்றது என்பதையே மாணிக்கவாசக அடிகளது மேற் காட்டிய “இரும்புதரு மனத்தேனை ஈர்த்து” என்னும் தொடர்படப் பிடித்துக் காட்டுகின்றது.

இரும்பு எப்படிப்பட்ட தன்மையுடையதொன்று என்பது நாமெல்லோரும் அறிந்ததே. அதனிலும் கடினமானதொரு அதாவது அதனின்றும் அணுச்செறிவுடைய உலோகம் யாதேனும் உண்டோ என்று வினாவத்தக்க அவ்வளவு கடினமானது இரும்பு. அப்படிப்பட்ட தன்மையுடையது தனது மனம் என்கிறார் அடிகள். இளமையிற்றானே சித்தாந்த சாத்திரங்களை எல்லாம் ஐயந்திரிபுற உணர்ந்து, உலகம் நிலையாத் தன்மையுடைத்தெனக்கண்டு தாமரையிலையின் நீர்போலப் பற்றின்றி உலகத்தைக்காத்துத் தலைவராகிய சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்றுத் தமது முப்பத்திரண்டாவது பராயத்திற்றானே அவர் தானடைதலாகிய சிவசாயுச்சிய பதவியடைந்த அடிகளது மனமே இரும்பின் தன்மையுடைத்தாயிருந்தது என்றால், உலக போகங்களிலே அழுந்தி, தமது மனைவி மக்கள் சுற்றமே தமக்குப் பேராதாரமாகக் கொண்டு, அப்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

கவே விடுகிலே மிக நன்னெறியினும் மாயாவாத உலகாயதகாலமாயிருக்காலிற் சற்சன சங்கங்கள் கூடித்தெய்வப்பணிபுரிய வேண்டிய தருணமாகின்றது. எனவே இச்சிவப்பணியில் [illegible] வார்களாக.

அளவைச் சிவனடியார்
வரைவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழந்தமிழ்க் களஞ்சியத்தில் ஒருமணி!

# பத்துப் பாட்டின் பண்பு

**பத்துப்பாட்டிற் சில நயங்கள்**

இன்னும், திருமுருகாற்றுப் படையில், முருகனது ஆறு படை வீடுகளும், ஆறு திருமுகங்களும் பன்னிரு ஆயுதங்களும் அவ் ஆயுதங்களின் தொழில்களும் முருகனுக்குரிய பல திருப் பெயர்களும், அவனைப் பரவுதலும் நிறைந்து ஒளிர்கின்றன. பொருநராற்றுப்படையில், யாழின் ஓசையில் கல்லும் தன்கொடுஞ் செயலை மறந்தனர் என்று கூறுவது எத்தகைய விழுமிய பொருள்! பயித்தியம் பிடித்தவர்களுக்குச் செய்யும் மருத்துவ முறையில், நல்லிசையில் அவர்களை ஈடுபடுத்தி குணப்படுத்துவதும் இன்று கையாளப்பட்டு வருகின்றதல்லவா! யாழ் என்னுஞ் சொல்லே, 'வயால்' ஆகி, 'வயலின்' ஆயிற்று என்று கூறுவது பொருத்தமல்லவா. பாணாற்றுப்படைகளில், இசையைப்பற்றிய குறிப்புகள் அளவிடமுடியாதனவாகும். பெரும்பாணாற்றுப்படையில், திருவெஃகா, காஞ்சி முதலிய ஊர்களின் சிறப்பும் திருமால் வணக்கமும் எடுத்தாளப்பட்டதல்ல? இதில் 'ஏழின கிழவ' என்று கூறியது கரிகால் வளவனையா? அல்லது அவனை ஆட்கொண்ட சிவமுருகப்பெருமானையா? சிறுபாணாற்றுப்படையில், 'ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த ஆய்'' என்று கூறியபடி ஆலின் கீழிருக்கும் தென்முகக்கடவுளை 3000 ஆண்டுகளுக்கு முன்னரேயே மக்கள் வழிபட்டுவந்தது தமிழ் நாடல்லவா? வேலூரின் சிறப்பும் ஆமூரின் பெருமையும் பலவாயிரம ஆண்டுகளுக்கு முந்தியதல்லவா? ''தாமை முடித்துத் தருப்பை வேய்ந்த குறியிறைக் குரம்பை'' என்றபடி தருப்பைப் புல்லாலேயே வேயப்பட்ட இறப்பையுடைய குடிலையாயின் அதன் பெருமை தான் என்னே?

''தீபட மலர்ந்த கடவுள் ஒண்பூ அடைதல் ஓம்பி''— கடவுள் சூடுதற்குரிய அழகிய தாமரை எனபதில் எத்தகைய ஆழ்ந்த சமயக் கருத்து அடங்கியுள்ளது! முல்லைப் பாட்டில் ''நற்றேய்த்து உடுத்த வடிவப்பார்ப்பான் முக்கோல் அசை நிலை கடுப்ப'' — காவிக் கல்லைத் தோய்த்த துகில் (துணி) அணிந்து நோன்பு காக்கும் அந்தணன் என்பதிலிருந்து காவித் துகிலின் பெருமை தமிழ்நாட்டிற்குரிய தென்பது வெளியாகின்றதல்லவா! மதுரைக் காஞ்சியில் ''பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது குடமுதல் தோன்றிய தொன்று தொழு பிறையில்'' என்று மேற்றிசையில் தோன்றிய பிறை (சந்திரன்) தொழுவது அக்காலத்து மக்களது ஒழுக்கந்தானே! ''நீருநிலனும் தீயும் வளியும் ஆக விசும்பொடு ஐந்துடனியற்றிய மழுவாள் நெடியோன் தலைவனாக'' - என்றும், திருக்கோயில்களிலுள்ள நாயன்மார், வானுறை தெய்வங்களெல்லாம் எத்தனை பேருமாய் எடுத்துரைக்க பட்டுள்ளது! மழுவேந்திய சிவபிரானை தெய்வங்களின் முதல்வனாகக் கொள்ளப்பட்டதும் தெளிவல்லவா! ''கணம்கொள் அவுணர் கடந்த பொலம் தார் மாயோன் மேய ஓணம் நன்னாள்'' என்று மாயோனது பிறந்த நாளாகிய திருவோணத் திருவிழா நடத்தியது அறிந்து மனமார மகிழ்கின்றோமல்லவா.

— ''தொண்டன்'' —

### கதாகாலக்ஷேபம்

வருகிற வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் தெல்லிப்பழை கிழக்கு ஞானவைரவசுவாமி கோவிலில் திருமயிலை தேவி காஞ்சனமாலை அம்மையார் அவர்கள் கதாகாலக்ஷேபம் செய்வார் என அறிகிறோம். நேரம் மாலை 9-30 மணி.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


## நீரர மங்கையர்

=O=

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கருகே நீந்திச் சென்று கடலடியிலுள்ள அழகை வருணித்துக் கனிவாய்ப் பாடுவர். ''கப்பல் உடைந்தால், மாலுமிகளே! கீழே கடலுக்குள் இறங்க அஞ்ச வேண்டாம்; கடலினடியில் அழகிய உலகொன்றுண்டு; அங்கே வந்து சேர்ந்தால் இன்பமாய் உயிர் வாழலாம்....'' என்ற பொருள்படும் இனிய பாட்டுகளை இன்னிசையோடு பாடுவர். ஆனால் கப்பலோட்டிகளுக்கோ அவர் மொழி விளங்குவதில்லை. அப் பாட்டின் இன்னிசையைப் புயற் காற்றின் ஒலியென நினைப்பர். கடலடியில் இருக்கும் அதிசயங்களைக் கடலோச்சுவோர் பார்த்ததேயில்லை. ஏனெனில் கப்பல் உடைந்தவுடன் அவர் கடல் நீரில் அமிழ்ந்தி இறந்துவிடுவர். அதனால் அவர் உயிரோடு அங்கே செல்வதில்லை. உயிரில்லா உடல் மட்டுமே கடலரசன் மாளிகையைப் போய் அடைகின்றது.

இவ்வண்ணம் கைகோத்தவாறு அவர் அலைக்கூடாக நீந்திப் போகும்போது ஆக இளைய குழந்தை தனிமையாய் வீட்டிலிருந்தவாறே அவரை இமை கொட்டாது பார்ப்பாள். தன் சகோதரியர் தன்னைத் தனிமையாய் விட்டுப் போவதை நினைத்துச் சில வேளைகளில் அழ விரும்புவாள். ஆனால் நீர் வாழ்வாருக்குக் கண்ணீர் இல்லை. அதனால் அவள் அழ முடியாது. இக் காரணத்தால் கவலை வந்தால் அவர் எம்மிலும் மிகத் துன்பமடைவர். ''எனக்குப் பதினைந்து வயது இப்போது ஆனாலோ! மேலே இருக்கும் நிலவுலகத்தையும் அங்கு வாழ் மக்களையும் பார்க்க எனக்கு இருக்கும் ஆசைக்கோர் அளவில்லை. அவ்வுலகைக் கண்டால் என் மனம் மிகுந்த இன்பம் எய்தும். இது உண்மை, உண்மை'' என்று இவ்வாறு தனக்குள் கூறிக் கொள்வாள்.

சில காலஞ் சென்றபின் பதினையாண்டு நிரம்பியது. அவ்வண்ணம் ஆய அன்று அவள் பாட்டி அவளை அழைத்து, ''குழந்தாய்! இன்று உனக்குப் பதினைந்து வயது ஆகின்றது. இனி நீ உன் விருப்பப்படி எங்கும் போய் வாலாம், இங்கே வா. உன் சகோதரியரைப்போல உனக்கு அழகாக உடுத்திவிடுகின்றேன்'' என்று கூறினள். இவ்வாறு கூறிவிட்டு அவள் தலையை அலங்கரித்து அதில் அல்லி மலர் தொடுத்த ஒரு மாலையைச் சூட்டினள். அம்மலரின் ஒவ்வோரிதழும் முத்தினாலாயது. இதன்பின் எட்டுப் பெரிய முத்துச் சிப்பிகளை எடுத்து அவள் வாலிற் கட்டிவிட்டனள். இது அவள் உயர்குடிப் பிறப்பைக் காட்டுவதற்காக. ''பாரமாய் இருக்கின்றது, பாட்டி இவை. எனக்கு வேண்டாம்'' என்றாள் சிறுமி. ''அதற்கென்ன செய்வது. அழகு வேண்டுமென்றால் கொஞ்சத் துன்பமும் அடையத்தானே வேண்டும்?'' என்று பாட்டி பதில் இறுத்தாள். சிறுமிக்கோ அவ்வணிகலன்களையும் கழற்றி எறியவிருப்பம். இவை யாவற்றுள்ளும் தன் தோட்டத்திலுள்ள செம் மலர்களே தனக்கு மிக அழகு என்று எண்ணினள். ஆயினும் என் செய்வது. பாட்டியிடம் கொண்ட பயத்தினால் அவள் அங்ஙனம் செய்யத் துணியவில்லை. ''போய் வருகிறேன், பாட்டி'', என்று சொல்லி அவளிடம் விடை பெற்றுக் கொண்டு ஒரு நீர்க் குமிழி எவ்வண்ணம் நீருக்கூடாக மேல் எழுமோ அதுபோல விரைவாய் எழுந்து கடலின் மேற்பாகத்தைவந்தடைந்தாள் .... ... .... .... .... (வளரும்.)

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப,

# இரு பெருஞ் சம்பவங்கள்!

சமீபத்தில் யாழ்ப்பாணம் இரண்டு சம்பவங்களைக்காணும் புண்ணியம் பெற்றது. ஒன்று வண்ணை வைத்தீசுவரன் கும்பாபிடேகம். மற்றது திருப் பழனி வேதாகம பாடசாலைத் தலைவரும், ஆதிசைவப் பிராமணக் குலத்தவரும், சித்தாந்த சரபம் என்ற புகழ்மாலை புனையப்பெற்று விளங்குபவருமாகிய காசிவாசி சிவஸ்ரீ ஈசானசிவாச்சாரியரவர்களின் திவ்விய சைவ சித்தாந்தப் பிரசங்கம். இது இன்று நின்றுவிட்டது, விசனிக்கத் தக்கது. அது நடைபெறுகிறது; பெரிதும் விரும்பத் தக்கது.

மாக்கருணை யுருவமானதும் தேவர்க்குங் காண்டற்கரிய பேரொளிப் பிழம்புமாகிய பெரு வள்ளல் நெறியுரைத்த முறையில் எளி வந்து சிவலிங்க வடிவமாய் யாவருங் காண வீற்றிருக்கும் வைபமன்றோ! நாடொறும் மாலைக் காலங்களில் அப்பரும் அம்மையுமாய்த் திருவுலாப் போந்தருளுங் காட்சி காண வெளியதோ! பிறவிதொறும் நிறைந்த புண்ணியப் பேறல்லவோ! இன்னும், இருக்கொடு தோத்திரம் இயம்புங் கோட்டியினர் இசைத்து வரக்காணோம்? சிவ நாமம் சொல்லிப் பவமறுக்கும் பத்தர் கூட்டம் பணிந்து வரக் காணோம்? இன்னும் இவைகளை யாழ்ப்பாணத்துப் புண்ணியத் தொண்டர் நினையாததேனோ? .......! ஆண்டவன் திருவருள் கூட்டிவைக்கவேண்டும்; வேண்டும்!

குமரன்.

வண்ணை, 19-2 53.

### 'இருப்புநரு மனத்தேனை ஈர்த்து'-

2-ம் பக்கத் தொடர்ச்சி

போகங்களிலேயே மேல் மேலும் முன்னேற்றமடைய வேண்டும் என்பதையே இலக்காகக்கொண்டு மேலும் பிறவிக்கும் வித்தினை இட்டுக் கொண்டிருக்கும் எம்போன்றாரது மனத்தின் தன்மைக்கு உவமை சொல்லப் புகுந்தால் அது முடிவதான காரியமாகுமா?

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

**இவ்வாரப் பலன்கள் 22—2—53——28—2—53**

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

சிறுசிறு உடற்கோளாறுகளைத் தவிர இவ்வாரம் நன்மைக்குரியது. புது முயற்சிகள் நற்பலனையளிக்கும். ஆனாற் சிரமம் உண்டு. சுற்றத்தவர்கள் வார இறுதியிற் றொல்லையை வருவிப்பார்கள்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

கருமங்களாற்றச் சுலபமான ஒரு வாரம். நண்பர் பெரிதுமுதவியாயிருப்பர். காத்திராத நயங்களுக்கு இடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

மறுபடியும் நல்ல வாரம். எண்ணியனவற்றுட் சில கைகூடும். வீர முயற்சியில் வெற்றியும் பணப் பேறும் கிடைக்கலாம், விசேடமாக வார இறுதியில். இன்னமும் நற்காலத்துக்கிடமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

மற்றையோரின் கருமங்களிலே தலையிடவேண்டி வரும. குடும்ப அலுவல்களிலும சிறு முன்னேற்றத்துக்கிடமுண்டு. வாரம் முடியமுன் சில நன்மாற்றங்கள் காணலாம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

உத்தியோகச் சிறு தொந்தரவுகளும் குடும்பத் தொல்லைகளும் தோற்றலாம். எக் கருமத்திலும் அவதானமெடுத்தல் நன்று. பண நலனுக் கிடமுண்டெனினும் வருவாயெல்லாம் செலவாகிவிடும்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

புதிய சகாக்கள் இவ்வாரம் பெருமுதவியாயிருப்பர். மறைமுக எதிரிகள் சிறு தொல்லைகளை விளைவிக்கக் கூடும். எனினும் அவை பயனடையா, செலவு கூடிக்கொண்டேவரும்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

வரவையும் செலவையும் சரிப் பண்ண முடியாமலிருக்கும். ஞாயிறன்று நிலைமை சீர்கெடக்கூடும். ஏனைய நாட்களிற் புது முயற்சிகள் பலனளிக்கக்கூடும் ஆனாற் கைக்காசு கிடைக்கமாட்டாது.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

முதன் மூன்று நாட்களிலும் அவதானம் வேண்டும். குடும்பத் தொல்லையும் உத்தியோகச் சிக்கலும் தோற்றக்கூடும். ஆகவே பணநட்ட மேற்படலாம், புதன் [illegible] நற்சாலம் உண்டெனினும் [illegible] அமைதி கிடையாது.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

ஆரம்ப நாட்கள் மூன்றும் புது முயற்சிகளுக்குப் பெரிதும உகந்தவை. செவ்வாய் மாலை புதன் வியாழன் முற்பகல் தொல்லைகள் தோற்றக்கூடும். பின்னர் நற்காலம் வரும்.

**மகரராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

வெள்ளி சனியைவிட மற்றைய நாட்கள் நன்மையளிக்கும். நண்பர்கள் மிக உபயோகமாயிருப்பர். எதிர்பாராத இலாபம் வரக்கூடும். இறுதி இரண்டு நாட்களிலும எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். உடல் நலம சீர்கெடக்கூடும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

அநேகர் உமது புத்திமதியை எதிர்பார்ப்பார்கள். புது நட்புண்டாக இடமுண்டு. மற்றையோரின் கருமங்களில் ஈடுபட நேரிடும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

உமது தொல்லைகள் சிலவற்றைத் [illegible] முடியும். பண [illegible] சச்சரவு தோற்றக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவாச்சாரியாரின் சித்தாந்தச் சொற்பெருக்குச் சிறப்பு

இன்று சில நாட்களாக யாழ் நகர் மக்கள் தாம்செய்த புண்ணியத்தின் நிறைவெய்தியதென இறும்பூதுகொள்கின்றார்கள். யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும் தனது மிக உயர்ந்த கடமையைச் செய்ய முன் வந்தது. இது போல் இன்னும் பல அரிய தொண்டுகள் இக்காலத்துக்கு இன்றியமையாதன. சைவநன் மக்கள் பல உண்மைநூற்கருத்துக்குப் புறம்பான பேச்சுக்களாலுந்தப்பட்டு உள்ளம் பேதம் காலம்! உண்மை நிலையில் நின்று வழுவும் காலம்! இத்தருணத்தில் பழனி வேதாகம பாடசாலைத் தலைவரும் சுத்தாத்துவித சைவசித்தாந்த பண்டிதருமாகிய சித்தாந்த சரபம் காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியர் அவர்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் நாவலர் மண்டப சைவாச்சிரமத்தில் 30-1-53 வெள்ளிக்கிழமை தொடக்கம் சுத்தாத்துவித சைவசித்தாந்த விரிவுரைகள் நிகழ்த்திவந்தார்கள். அவர்கள் சிரமம் பாராது வேதமென்னும் பாதலமரனி விவர்த்து சைவாகமங்களாம் கொப்புகளில் தாவி ஒரும் வேதாந்த மென்னுச்சியிற பழுத்த ஆராவ்ந்ப அருங் கனியை எடுத்துப் பிழிந்து சுத்தாத்துவித சைவ சித்தாந்தமாம இரசத்தை—சாரத்தை பால் நினைந்தூட்டும் தாய் போல அன்பாகவும் அருமையாகவும் இனிமையாகவும்ஊட்டினார்கள். பிற சமய வாதிகளாம் பட்சி சாலங்கள் அக் கனிக்கிடை யூறு செய்து அசுசிப்படுத்தாத முறையாக மக்களை உண்மை வாழ்வில் வாழ்விக்கக் கேட்போர் ஆச்சரியப்படும்படி விளக்கிக் காட்டுகிறார்கள் உரிய காலத்தில் அதைச் சுவைத்து இன்பமடையமுந்துங்கள். பிறவிச் சாகரக் கரையேற இது தோணியாகின்றது.

சிவஞானபோதச் சூத்திரங்கள் முறையானே சித்தியார்ப் பாக்களுடன் சேர்த்து உலகில் சமயக் கொள்கைகளைக் கூறவந்த நூற்பெருகுதிகளுக்கு

திரு பொ. அப்புக்குட்டி அவர்கள்

எழுதியது

அளவிலலை, அவ்வாறெழுந்த பன்னூல்களின் முடிவுகளையுமதன திருப்புகளாகக் கொண்டு தலையாய உண்மைப்பொருளைத் தன்னகத்தே நன்கு விளக்கி முழுமுதற் கடவுளை கடவுளை அங்கை நெல்லிக் கனியெனக்கண்டு கலந்து எல்லையற்ற பேரின்பம் எளிதாகத் துய்த்தற்குரிய நெறி சாதனக் காட்டுவதில் இணையற்ற பெருமைவாய்ந்த அருணூற்றொகையே சுத்தாத்துவித சைவ சித்தாந்தமாகுமென்று விளக்கி, மிக இலகுவாக அதற்கு ஏற்ற பிரமாணங்களைச் சுட்டிக் காட்டியும் பெரிய புராண தேவார உதாரண நயங்களைச் சேர்த்தும் பேசும் அருமை வியக்கத்தக்கது.


●நீங்கள் இளமைப் பருவத்தை யடைய ○○

சி. எம். சாமி

## தங்க பஸ்பம்

உபயோகியுங்கள்

இரத்தவிருத்தியைத் தருவதில் சிறந்தது.

இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும்.
இல்வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும்.
நீரழிவு, பவுத்திரம், மூலம், குன்மம், இடுப்புவலி,
வாய்வு, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

## குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு
தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும்.
அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S i
(கொட்லாக் இனம்) (T)

## சிறந்த கொழுக்கி ஓடுகள்

பேசல் மிசன் கோட்டை மார்க் இரட்டைப் பீலி கொழுக்கி ஓடுகளே மற்றை எல்லா ஓடுகளிலும் சிறந்தவை. எப்படி மழை பெய்தாலும் கசிந்தொழுகமாட்டா. வெயில் மழைகளினால் பங்கப்படாது நீடித்தகாலம் பாவிக்கக் கூடிய திண்மை உடையன!

கிடைக்குமிடம்:

வில்லியம் மேதர் சன்ஸ்,
சோல் ஏஜென்ஸ்,
யாழ்ப்பாணம்.

[M. 225. 23—24-4-53.]



### அறிவித்தல்

ஒஸ்றின் (Austin) 7 — X இலக்கம். இயந்திரம் தைப்பு • கூடாரம் யாவும் நல்ல நிலையில் புது மின் சாரசத்திப் பெட்டி உடையது. (Battery)

R. S. கந்தையா
தலைமைக்காரன்
தும்பளை
பருத்தித்துறை.

M. 254 20, 24—2—53.


## சிவராத்திரி தினம்

**திருக்கேதீச்சரத்தில்**

மகா சிவராத்திரித் திருநாள் மாசிமீ 1-ந் திகதி (12 - 2 - 53) வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் ஆலயத்தில் ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் காலம் கடந்த சைவப் பெரியாரும் நாவலர் மாணவருமாகிய சயாரதின முதலியார் அவர்கள் பாடிய 'மன்னுமிராமேச் சரத்து'' என்னும் செய்யுளைச் சமய குரவர் வணக்கமாகப் பாடிச் சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த கேதீஸ்வரத் தேவாரப்பதிகத்தைப் பக்திச்சுவையோடு சைவத் திருவாளர் S. கோவிந்தசாமி அவர்கள் பாடினர். பின் சைவப்பெரியார்களான பண்டிதர் திரு. K. வேலுப்பிள்ளை பண்டிதர் திரு. கந்தவனம் ஸ்ரீமத். பொன்னுச்சாமிக்குருக்கள், சங்கீதபூஷணம் திரு. அப்பாக்குட்டி, திரு. பெரியதம்பி, திரு. விஞசித்தம்பி முதலானோர் கேட்டாருள்ளங்களிக்குமாறு புராண படனம் செய்தனர். பின் சைவாசிரிய கலாசாலை மாணவர்களாலும் Dr. S. சிவயோகம்மா திரு S ஆறுமுகம் திரு K. சிதம்பரப்பிள்ளை முதலானோர் இசைக்கச்சேரி நடத்தினர். பின் ஆசிரியர்கள் திரு. S. கார்த்திகேசு திரு. P. சுப்பிரமணியம் ஆகியோர் உபந்நியாசங்கள் செய்தனர். பின் வெள்ளிக்கிழமை காலை 4 மணியளவில் சுவாமி தீர்த்தம் முடிந்ததும அடியார்களுக்கு இங்குள்ள மடங்களில் அன்னதானம வழங்கப்பட்டது.

**கோப்பாயில்**

''நாஸ்திகம் வளர்ந்துவரும் இந்நாளில் நம் தமிழ் இளைஞர் எல்லோரும் ஒருமித்து நாஸ்திகத்தை வேரோடு களையவேண்டும்'' என்று கோப்பாய் வீரபத்திரேஸ்வரன் கோயில் 30 - வது சிவராத்திரி விழாவின்போது ஸ்ரீமான் அ. அமிர்தலிங்கம் பீ. ஏ. (அத்துவக்காத்) பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், தற்போது வெளிவரும் சினிமாப் படங்கள் இளைஞர்களின் மனதைக் கெடுத்துத் தெய்வம் இல்லையென்று போதித்து வருவதால் அதை நம்பாமல் கடவுள் இருக்கிறார் என்பதை உணர்ந்து நடக்கவேண்டுமென்றும் இளைஞர்களைக் கேட்டுக் கொண்டார். பின்னர் திரு. S. கந்தையா பண்டிதரால ஓர் உபந்நியாசமும் திருவாளர்கள், சோதிலிங்கம் ஆசிரியர் K. V. சாமிகள (இணுவில்) திரு. த. நடேசபிள்ளை ஆகியோரால் சங்கீத கதாகாலக்ஷேபம் நடைபெற்றன.

**காரைநகரில்**

கடந்த வியாழக்கிழமை (12 2 53) கருங்காலி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் மாலை ஆறுமணியளவில் விசட பூசைகள் செய்யப்பெற்றன. அதன்மேல் இந்துக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீமான் ஆ. சிதம்பரப்பிள்ளை அவர்கள் ''மனுநீதிகண்டசோழர்'' என்னும் விடயத்தைப் பிடிகையாகக் கொண்டு ஓர் சிறந்த உபந்நியாசஞ் செய்தனர். இதன் பின் மறுநாள் காலை (13 - 2 - 53) 5மணியளவில சுவாமி வியாவில சமுத்திர தீர்த்தத்தை நோக்கி ... திருத்தியதும் சிவராத்திரி தினம் இனிது நிறைவெய்தியது.


திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும் | திறமான ருணிமார்க்ஓடுகள் 13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கன்கசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.


## வண்ணை ஐயனார் கோவில்

## திருப்பணி வரவு

### திரவியோபகாரிகள்

| | | ரூபா | | | ரூபா. |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. சு. நாகேந்திரம் | 200 | 19. | ,, மு. நாகரத்தினம் | 10 |
| 2. | ,, T. சண்முகநாதன் | 12 | 20. | ,, T. சீனிவாசகம் | 10 |
| 3. | ,, செ. அப்புத்துரை | 40 | 21. | ,, எஸ். அமிர்தலிங்க | 25 |
| 4. | ,, ஆ. தம்பு | 50 | 22. | ,, ரீ. செல்வரத்தினம் | 20 |
| 5. | ,, எஸ். யோகம்மா | 30 | 23. | ,, கே. துரையப்பா | 25 |
| 6. | ,, ஐ. சின்னையா | 10 | 24 | ,, மு. கணபதிப்பிள்ளை | 15 |
| 7. | ,, இ. ஆனந்தர் | 25 | 25. | ,, வி. துரையப்பா | 10 |
| 8. | ,, க. வைத்யலிங்கம் | 10 | 26. | ,, கா. மீனாட்சிப்பிள்ளை | 10 |
| 9. | ,, க. அப்பையா | 50 | 27. | ,, சி. மாணிக்கவாசகர் | 07 |
| 10. | ,, மு. கணபதிப்பிள்ளை | 10 | 28. | ,, T. சண்முகலிங்கம் | 10 |
| 11. | ,, த. செல்லத்துரை | 10 | 29. | ,, ச. செல்லப்பா | 25 |
| 12. | ,, ம. சிவப்பிரகாசம் | 10 | 30. | ,, T. செல்வரத்தினம் | 05 |
| 13. | ,, பொ. இராசையா | 10 | 31. | ,, கா. தில்லையம்பலம் | 25 |
| 14. | ,, எஸ். ஆறுமுகசாமி | 10 | 32. | ,, சு. கனகசபை | 05 |
| 15. | திருமதி. கனகசூரியர் | 10 | 33. | ,, பி. எஸ். ஏ. இராசையா | 10 |
| 16. | ,, எஸ் விஸ்வலிங்கம் | 10 | 34. | ,, சி. விஸ்வலிங்கம் | 05 |
| 17. | திரு. எஸ் பொன்னம்பலம் | 10 | 35. | ,, க. இராசா | 10 |
| 18. | ,, கே. கனகரத்தினம் | 25 | | | |

இன்னும் செய்யவேண்டிய வேலைகளிருக்கின்றன 250 - மேல் கொண்ட கடனுமிருக்கின்றது. வரவேண்டியவர்களின் நாமங்கள் வரவின் பின் பிரசுரமாகும். ஐயனார் கோவிலடி அன்பர்களனைவருக்கும் வணக்கம்.

இங்ஙனம்,
ஐயனார் கோவில் உரிமைப் பரம்பரைப் பூஜகர்
சிவ. ஐயம்பிள்ளைக்குருக்கள்.

Iyanarkovil Road, Vannarponnai.
M. 250 17, 20—2—53.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday February 20 1953

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org